# மனித வளக் குறியீடுகள்

1. இந்தியாவில் மனித வளங்களின் வளர்ச்சிக்கு கீழ்க்கண்ட எந்த அமைச்சகம் பொறுப்பாகும்?

A) மனித வள மேம்பாட்டு அமைச்சகம்
B) நிதி ஆயோக்
C) பாதுகாப்புத் துறை அமைச்சகம்
D) நிதி அமைச்சகம்

**Ans: A**

2. மனித வள மேம்பாட்டு அமைச்சகம் எங்கு அமைந்துள்ளது?

A) மகாராஷ்டிரா (மும்பை)
B) உத்தரப் பிரதேசம் (லக்னோ)
C) கர்நாடகம் (பெங்களூரு)
D) சாஸ்திரி பவன் (புது டெல்லி)

**Ans: D**

3. 2010-ம் ஆண்டின்படி, இந்தியாவின் மனித வள குறியீட்டு அளவு எவ்வளவு?

A) 0.423
B) 0.563
C) 0.580
D) 0.852

**Ans: C**

4. பொருளாதார மேம்பாடு என்பது எதனைக் குறிக்கிறது?

A) மக்களின் செயல்பாடுகள், நிலையில்லாத வாழ்க்கை
B) மக்களின் வாழ்க்கைத் தரத்தையும், நிலையான வளர்ச்சியையும்
C) நிலையில்லாத செயல்பாடுகள், நிலையில்லாத வாழ்க்கை
D) மக்களின் கல்வி குறைபாடுகள், ஏழ்மையான வாழ்க்கை

**Ans: B**

5. PCI என்பது எதனைக் குறிக்கிறது?

A) தனி நபர் வருமானம்
B) குழு நபர் வருமானம்
C) தனி நபர் வாழ்க்கை
D) பொது மக்களின் சமுதாய வாழ்க்கை

**Ans: A**

6. NNP என்பது எதனைக் குறிக்கிறது?

A) மொத்த நாட்டு உற்பத்தி
B) நிகர நாட்டு உற்பத்தி
C) தனி நபர் வருமானம்
D) சராசரி வருமானம்

**Ans: B**

7. சமீபத்தில் வாங்கும் திறன் சமநிலை அடிப்படையில், இந்தியா எத்தனையாவது பொருளாதார நாடாக அமைந்துள்ளது?

A) இரண்டாவது
B) நான்காவது
C) மூன்றாவது
D) ஐந்தாவது

**Ans: C**

8. நாட்டின் மேம்பாட்டை அளவிடும் சிறந்த குறியீடு ---------- ஆகும்.

A) தனி நபர் வருமானம்
B) நிகர நாட்டு உற்பத்தி
C) மக்களின் நிகர வருமானம்
D) மக்களின் சமுதாய வாழ்க்கை

**Ans: A**

9. ஓர் ஆண்டில் நாட்டின் புவியியல் எல்லைக்குள் குறிப்பிட்டக் காலத்திற்குள் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் மற்றும் பணிகளின் மொத்த மதிப்பே ----------- ஆகும்.

A) மொத்த உள்நாட்டு உற்பத்தி
B) தனி நபர் உற்பத்தி
C) மனித வள குறியீடு
D) நிகர நாட்டு உற்பத்தி

**Ans: A**

10. தேசிய உற்பத்தியின் உண்மையான அளவாக கருதப்படுவது எது?

A) நிகர நாட்டு உற்பத்தி
B) மொத்த உற்பத்தி
C) தனி நபர் உற்பத்தி
D) மனித வள குறியீடு

**Ans: A**

11. HDI என்பது எதனைக் குறிக்கிறது?

A) மனித வள மேம்பாட்டுக் குறியீடு
B) மனித வள ஆராய்ச்சி கழகம்
C) மனித வள பொருளாதார குறியீடு
D) மனித வள வணிக குறியீடு

**Ans: A**

12. மனித மூலதனத்தை அதிகரிக்க பயன்படும் அனைத்து காரணிகளில் மிக முக்கிய காரணி?

A) உடல்நலம்
B) கல்வி
C) வளர்ச்சி
D) சுகாதாரம்

**Ans: B**

13. மனித வளங்கள் என்பது மக்களிடமுள்ள ஆற்றல்கள், திறன்கள், அறிவு ஆகிய மறைந்துள்ள சக்திகளை பண்டங்களின் உற்பத்தியிலும் அல்லது பயனுள்ள பணிகளை ஆற்றுவதிலும் பயன்படுத்த வேண்டும் என்பதில் அடங்கியுள்ளது என்று கூறியவர் யார்?

A) ஸ்கல்ட்ஸ்
B) ஆடம்ஸ்மித்
C) ஆல்பர்ட் மார்ஷல்
D) F.H. ஆர்பைசன்

**Ans: D**

14. உலகின் மனித வளர்ச்சி அறிக்கை யாரால் தயாரிக்கப்பட்டு வெளியிடப்படுகிறது?

A) சீனா
B) இந்தியா
C) ஐக்கிய நாடுகள்
D) ஜெர்மனி

**Ans: C**

15. சமீபத்தில் வாங்கும் திறன் சமநிலை அடிப்படையில், ஐக்கிய அமெரிக்க நாடுகள் எத்தனையாவது பொருளாதார நாடாக அமைந்துள்ளது?

A) இரண்டாவது
B) முதலாவது
C) மூன்றாவது
D) நான்காவது

**Ans: A**

16. சமீபத்தில் வாங்கும் திறன் சமநிலை அடிப்படையில், சீனா எத்தனையாவது பொருளாதார நாடாக அமைந்துள்ளது?

A) இரண்டாம் இடம்
B) மூன்றாம் இடம்
C) நான்காம் இடம்
D) முதலிடம்

**Ans: D**

17. அனைத்து நாடுகளின் தனி நபர் வருமானத்தின் கணக்கீடுகள் சர்வதேச அளவில் ஒப்பிடுவதற்காக ----------- மட்டுமே கணக்கிடப்படுகிறது.

A) அமெரிக்க டாலரில்
B) சீனாவின் யுவானில்
C) ஜப்பானின் யென்னில்
D) மலேசியா ரிங்கெட்டில்

**Ans: A**

18. பொதுவாக மனிதவள மேம்பாட்டு கோட்பாடுகளை --------------- திட்டங்கள் எனக் குறிப்பிடலாம்.

A) கல்வித் திட்டங்கள்
B) பொதுத்துறை திட்டங்கள்
C) மக்கள் வளர்ச்சி திட்டங்கள்
D) உலக நல மேம்பாட்டு திட்டங்கள்

**Ans: A**

19. மனித வள மேம்பாட்டின் எளிய கூட்டு குறியீட்டெண்ணிற்கும், -------------- ஈடுபட்டுள்ள மக்கள் சதவீதத்திற்கும் அதிகமான எதிர்மறை தொடர்பு உள்ளது.

A) விவசாயத்தில்
B) கல்வியில்
C) வாணிபத்தில்
D) தொழில்துறையில்

**Ans: A**

20. மனித வள மேம்பாட்டின் எளிய, கூட்டு குறியீட்டு எண்ணை வடிவமைத்தவர்கள் யார்?

A) ஆல்பர்ட் மார்ஷல் மற்றும் ஸ்கல்ட்ஸ்
B) ஸ்கல்ட்ஸ் மற்றும் ஹர்பிசன்
C) ஹர்பிசன் மற்றும் மேயர்சு
D) ஆர்பைசன் மற்றும் மேயர்சு

**Ans: C**

21. தமிழகத்தில் அமைந்துள்ள அணைக்கட்டுகளின் எண்ணிக்கை?

A) 81 B) 65 C) 52 D) 87

**Ans: A**

22. தமிழகத்தில் அதிக அளவு பயன்படுத்தப்படும் பாசனம் எது?

A) ஏரி பாசனம்
B) கிணற்று பாசனம்
C) ஆற்று பாசனம்
D) கால்வாய் பாசனம்

**Ans: B**

23. தமிழ்நாட்டில் காணப்படும் ஆறுகளின் எண்ணிக்கை?

A) 13 ஆறுகள்
B) 15 ஆறுகள்
C) 17 ஆறுகள்
D) 10 ஆறுகள்

**Ans: C**

24. குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கான முதலீட்டுத் திட்டங்களில் தமிழகம் வகிக்கும் இடம்?

A) மூன்றாமிடம்
B) ஆறாமிடம்
C) எட்டாமிடம்
D) முதலிடம்

**Ans: D**

25. நிதி ஆயோக் அறிக்கையின்படி, சுகாதாரக் குறியீட்டில் தமிழ்நாடு வகிக்கும் இடம்?

A) மூன்றாவது
B) நான்காவது
C) இரண்டாவது
D) ஐந்தாவது

**Ans: A**

26. இந்தியாவில் மூலதன முதலீட்டிலும் மொத்த தொழில்துறை உற்பத்தியிலும் மூன்றாவது இடம் வகிக்கும் மாநிலம்?

A) ஆந்திர பிரதேசம்
B) கர்நாடகா
C) தமிழ்நாடு
D) மத்திய பிரதேசம்

**Ans: C**

27. இந்திய அளவில் மனித வளர்ச்சி குறியீட்டில் தமிழ்நாடு வகிக்கும் இடம்?

A) மூன்றாவது
B) முதலிடம்
C) நான்காவது
D) ஆறாவது

**Ans: A**

28. இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் தமிழகத்தின் பங்களிப்பு ---------- இடத்தில் உள்ளது.

A) இரண்டாவது
B) மூன்றாவது
C) நான்காவது
D) ஐந்தாவது

**Ans: A**

29. எந்த செயல்பாடுகளில் தமிழ்நாடு மற்ற மாநிலங்களை விட சிறப்பாக உள்ளது?

A) பொதுப்பணி
B) தொழில்துறை
C) கல்வித்துறை
D) வறுமை ஒழிப்பு

**Ans: D**

30. எந்த ஆண்டிலிருந்து தமிழ்நாட்டின் வளர்ச்சியானது விரைவாக உள்ளது?

A) 2005
B) 2002
C) 2003
D) 2008

**Ans: A**

31. வேலையின் தன்மைக்கேற்ப சரியாக ஊக்குவித்து செயல்படுத்தினால் அதே அளவிற்கு உடலுக்கு தேவையான உணவை கிடைக்க செய்யும் என்று கூறியவர் யார்?

A) ஜே.சி. குமரப்பா
B) சுவாமி விஸ்வநாதன்
C) பழனிவேல்
D) நாராயண மூர்த்தி

**Ans: A**

32. பொருளாதார வளர்ச்சி என்பது பொருளாதார முன்னேற்றத்தின் ஓர் அம்சமாகும் என்று கூறியவர் யார்?

A) ஆடம் ஸ்மித் B) கீன்ஸ்

C) அமர்த்தியா சென் D) வெயினர்

**Ans: C**

33. GNH-ல் குறிப்பிடப்படும் தூண்களின் எண்ணிக்கை?

A) நான்கு B) மூன்று C) இரண்டு D) ஐந்து

**Ans: A**

34. ஐக்கிய நாடுகள் சபை "வளர்ச்சிக்கான ஒரு முழுமையான அணுகுமுறைக்கு - மகிழ்ச்சி" என்ற தீர்மானத்தை நிறைவேற்றிய ஆண்டு?

A) 2015 B) 2002 C) 2011 D) 2008

**Ans: C**

35. GNH என்ற வார்த்தையை 1972ல் உருவாக்கியவர் யார்?

A) சைமன் குஸ்நட் B) ஜிகமே சிங்கயே வாங்ஹுக்

C) அல்மதீன் அஸாலக் D) ஆர்பைசன்

**Ans: B**

36. ஒரு மக்கள் தொகை கூட்டு மகிழ்ச்சி மற்றும் நல்வாழ்வை அளவிடப் பயன்படும் குறியீடு?

A) HPI B) HDI C) GNH D) UDP

**Ans: C**

37. மொத்த தேசிய மகிழ்ச்சி என்பது எந்த அரசாங்கத்தை வழி நடத்தும் தத்துவமாகும்?

A) பூடான் B) ஜப்பான் C) மலேசியா D) பிரிட்டன்

**Ans: A**

38. GNH என்பது எதனைக் குறிக்கிறது?

A) மொத்த தேசிய மகிழ்ச்சி B) மொத்த உயர்தர கல்வி

C) மொத்த தேசிய நெடுஞ்சாலை D) மொத்த தேசிய பாதுகாப்பு

**Ans: A**

39. 2018ம் ஆண்டு, IMF-ன் கூற்றுப்படி, இந்தியாவின் GDP-யின் வளர்ச்சி விகிதம் எவ்வளவு?

A) 7.3% B) 6.3% C) 5.4% D) 4.8%

**Ans: A**

40. சமீபத்தில் UNP -ஆல் வெளியிடப்பட்ட மனித வளர்ச்சி மதிப்பீடுகளில், இந்தியா வகிக்கும் இடம்?

A) 128 B) 130 C) 127 D) 110

**Ans: B**

41. 1934-ம் ஆண்டில் காங்கிரஸ் அறிக்கையின்படி, யாரால் GDP-யின் நவீன கருத்து முதன் முதலில் உருவாக்கப்பட்டது?

A) அமெர்த்தியா சென் `
B) கீன்ஸ்
C) சைமன் குஸ்நட்
D) ஆடம்ஸ்மித்

**Ans: C**

42. 2019ம் ஆண்டிற்கான மனித வள மேம்பாட்டு அமைச்சகத்தின் தலைவர் யார்?

A) ரமேஷ் போக்ரியால்
B) பிரகாஷ் ஜவடேகர்
C) ஸ்மிருதி ராணி
D) சஞ்சய் சாமரோ

**Ans: A**

43. மனித வள மேம்பாட்டு அமைச்சகம் உருவான ஆண்டு?

A) 1985, செப்டம்பர் 26
B) 1982, செப்டம்பர் 15
C) 1993, செப்டம்பர் 20
D) 1896, செப்டம்பர் 14

**Ans: A**

44. ஒரு நாட்டில் HPI அதிகமாக இருந்தால், அந்த நாடு ------------- நிலையை அடையும்.

A) ஏழை நாடு
B) வளர்ச்சி அடையும் நாடு
C) வளர்ந்த நாடு
D) பணக்கார நாடு

**Ans: A**

45. 1997ம் ஆண்டில் மனித வள மேம்பாட்டுக் குறியீடு ------------- அறிமுகப்படுத்தியது.

A) DPDE B) UPE C) HPI D) ERDO

**Ans: C**

46. மனித மேம்பாடு குறியீடு எத்தனை வளர்ச்சி இலக்குகளை அடிப்படையாக கொண்டு வரிசைப்படுத்தப்படுகிறது?

A) மூன்று B) இரண்டு C) நான்கு D) ஐந்து

**Ans: A**

47. முதல் மனித மேம்பாட்டு அறிக்கையை வெளியிட்டவர் யார்?

A) முகஹப்-உல்-ஹக் B) அல்மதீன் அஸாலக்
C) கீன்ஸ் D) ஆடம்ஸ்மித்

**Ans: A**

48. முத்துலெட்சுமி ரெட்டி அவர்கள், ஆதரவற்றவர்களுக்கு மறுவாழ்வு தரும் வகையில் அவ்வை இல்லம் என்ற அடைக்கல நிலையத்தை எங்கு தோற்றுவித்தார்?

A) சென்னை (தாம்பரம்) B) சென்னை (சாந்தோம்)
C) சென்னை (பல்லாவரம்) D) சென்னை (வேளச்சேரி)

**Ans: B**

49. முதல் மனித மேம்பாட்டு அறிக்கையை வெளியிட்ட நிறுவனம்?

A) நிதி ஆயோக் B) UNDP நிறுவனம்
C) மனித வள நிறுவனம் D) UDP நிறுவனம்

**Ans: B**

50. முதல் மனித மேம்பாட்டு அறிக்கையானது எந்த ஆண்டு வெளியிடப்பட்டது?

A) 1986 B) 2002 C) 1995 D) 1990

**Ans: D**

51. 1999ம் ஆண்டு பள்ளி மாணவர்களுக்காக தமிழ்நாடு அரசு செயல்படுத்திய திட்டம்?

A) வாழ்வொளி திட்டம் B) அறிவொளி திட்டம்
C) தொடக்கக் கல்வி D) அனைவருக்கும் கல்வி

**Ans: A**

52. அரசின் பங்கானது நேரடியாகவும், அதிக முக்கியத்துவத்துடனும் செயல்பட்டு அனைவருக்கும் கல்வி என்பதனை முன்னேற்றம் அடைய பாடுபட வேண்டும் என்று கூறியவர் யார்?

A) ஆடம்ஸ்மித் B) வெயினர்
C) கீன்ஸ் D) ஆர்பைசன்

**Ans: B**

53. 2004 - 2005-ம் ஆண்டின்படி, கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளின் எண்ணிக்கை?

A) 520 B) 405 C) 444 D) 477

**Ans: C**

54. அனைவருக்கும் தொடக்க கல்வி என்ற இலக்கை நோக்கமாகக் கொண்டு அறிமுகப்படுத்தப்பட்ட கொள்கை எது?

A) UNDP B) DPDC C) UPE D) DPDE

**Ans: D**

55. எந்த ஆண்டு முதல் இடைநிலைப்பள்ளிகளின் சேர்க்கை அளவானது 13 சதவீதத்திலிருந்து 59 சதவீதமாக உயர்ந்துள்ளது.

A) 1991-2001 B) 1998-2005

C) 1994-2002 D) 1995-2009

**Ans: A**

56. 2001-ம் ஆண்டின் கணக்கெடுப்பின்படி, தமிழகத்தின் ஒட்டுமொத்த எழுத்தறிவு நிலை?

A) 73.47 B) 63.54 C) 78.56 D) 69.54

**Ans: A**

57. எந்த ஐந்தாண்டு திட்டத்தில் அனைவருக்கும் கல்வி என்ற கருத்து முக்கியத்துவம் பெற்றது?

A) முதலாம் ஐந்தாண்டு B) இரண்டாம் ஐந்தாண்டு

C) மூன்றாம் ஐந்தாண்டு D) ஐந்தாம் ஐந்தாண்டு

**Ans: A**

58. கல்வித்துறையின் அடிப்படையான பிரச்சனைகளுள் ஒன்று ----------- ஆகும்.

A) அதிகமான முதலீடு B) குறைவான முதலீடு

C) தரமான முதலீடு D) மந்தமான முதலீடு

**Ans: B**

59. இன்று இந்திய மாணவர்களின் எண்ணிக்கையானது இங்கிலாந்து, பிரான்சு, கனடா மற்றும் நார்வே ஆகிய நாடுகளில் உள்ள மொத்த மக்கள் தொகையை விட அதிகமாகவே உள்ளது என்று கூறியவர் யார்?

A) கீன்ஸ் B) ஆடம்ஸ்மித்

C) JBG திலக் D) ஆர்பைசன்

**Ans: C**

60. மனித வள மேம்பாட்டு கோட்பாடுகளை எத்தனை வகைகளாக பிரிக்கலாம்?

A) மூன்று B) நான்கு C) ஐந்து D) ஆறு

**Ans: A**

61. தற்போது இந்தியாவின் நெல் உற்பத்தியில் இரண்டாம் இடம் வகிக்கும் மாநிலம் எது?

A) பஞ்சாப்
B) நாகாலாந்து
C) மத்திய பிரதேசம்
D) தமிழ்நாடு

**Ans: D**

62. தற்போது இந்தியாவின் நெல் உற்பத்தியில் முதலிடம் வகிக்கும் மாநிலம் எது?

A) ஒடிசா
B) அஸ்ஸாம்
C) மேற்கு வங்கம்
D) பீகார்

**Ans: C**

63. தற்போது தமிழகத்தில் அமைந்துள்ள வேளாண் காலநிலை மண்டலத்தின் எண்ணிக்கை எத்தனை?

A) ஏழு
B) நான்கு
C) எட்டு
D) ஆறு

**Ans: A**

64. 2016-17 - ம் ஆண்டின்படி, தமிழ்நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி எவ்வளவு?

A) 327.8 பில்லியன் டாலர்
B) 247.8 பில்லியன் டாலர்
C) 207.8 பில்லியன் டாலர்
D) 377.8 பில்லியன் டாலர்

**Ans: C**

65. மாவு அரைப்பான் இயந்திரத்திற்கான புவிசார் குறியீட்டை பெற்றுள்ள தமிழக மாவட்டம் எது?

A) மதுரை
B) திருச்சி
C) கோயம்புத்தூர்
D) சென்னை

**Ans: C**

66. மகப்பேறு காலத்தில் தாயின் இறப்பு விகிதத்தைக் கட்டுபடுத்துவதில் இந்திய அளவில் மூன்றாம் இடம் வகிக்கும் மாநிலம்?

A) தமிழ்நாடு
B) மத்திய பிரதேசம்
C) இராஜஸ்தான்
D) ஆந்திர பிரதேசம்

**Ans: A**

67. மகப்பேறு காலத்தில் தாயின் இறப்பு விகிதத்தைக் கட்டுபடுத்துவதில் இந்திய அளவில் இரண்டாம் இடம் வகிக்கும் மாநிலம்?

A) தமிழ்நாடு B) மகாராஷ்டிரா

C) குஜராத் D) கர்நாடகா

**Ans: B**

68. சிவகாசி நகரம் குட்டி ஜப்பான் என்று யாரால் அழைக்கப்பட்டது?

A) காந்தி B) ஜவகர்லால் நேரு

C) பெரியார் D) காமராஜர்

**Ans: B**

69. இந்திய அளவில், சிமெண்ட் உற்பத்தியில் இரண்டாம் இடம் வகிக்கும் மாநிலம்?

A) குஜராத் B) ராஜஸ்தான்

C) மத்திய பிரதேசம் D) உத்திர பிரதேசம்

**Ans: B**

70. மகப்பேறு காலத்தில் தாயின் இறப்பு விகிதத்தைக் கட்டுபடுத்துவதில் இந்திய அளவில் முதலிடம் வகிக்கும் மாநிலம்?

A) கேரளா B) தமிழ்நாடு

C) குஜராத் D) கர்நாடகா

**Ans: A**

71. 2011-ன் மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி, இந்தியாவின் மக்கள்தொகை அடிப்படையில் தமிழ்நாடு வகிக்கும் இடம்?

A) மூன்றாவது இடம் B) எட்டாவது இடம்

C) பத்தாம் இடம் D) ஆறாவது இடம்

**Ans: D**

72. தமிழகத்தில் ஒவ்வொரு ஆண்டும், பன்னாட்டு தோல் பொருட்கள் கண்காட்சி எங்கு நடைபெறுகிறது?

A) கோவை B) மதுரை C) திருச்சி D) சென்னை

**Ans: D**

73. 2011-ன் மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி, இந்திய மாநிலங்களில் மக்கள் தொகை அடர்த்தியில் தமிழ்நாடு வகிக்கும் இடம்?

A) 8-வது இடம்
B) 10-வது இடம்
C) 12-வது இடம்
D) 6-வது இடம்

**Ans: C**

74. தென்னிந்தியாவின் மொத்த மற்றும் சில்லறை ஆயத்த ஆடைகளுக்கான முக்கிய ஜவுளி சந்தை எங்கு அமைந்துள்ளது?

A) திருப்பூர்
B) கோவை
C) ஈரோடு
D) மதுரை

**Ans: C**

75. 2017-ல் ஐக்கிய நாடுகள் கூட்டமைப்பு வெளியிட்ட உலக மக்கள் தொகை பட்டியலில், தமிழ்நாட்டில் காணப்படும் மக்கள் தொகையின் அளவு எவ்வளவு?

A) 9 கோடி
B) 7.2 கோடி
C) 5.6 கோடி
D) 8.5 கோடி

**Ans: B**

76. பின்னலாடைகளின் நகரம் என அழைக்கப்படும் பகுதி எது?

A) உறையூர்
B) காஞ்சிபுரம்
C) திருப்பூர்
D) திருச்சி

**Ans: C**

77. இந்தியாவில் மாலிப்டினம் எனும் இரசாயனத்தாது எந்த மாநிலத்தில் கிடைக்கிறது?

A) தமிழ்நாடு
B) அசாம்
C) குஜராத்
D) ஒடிசா

**Ans: A**

78. இரும்புத்தாது சுரங்கம் தமிழ்நாட்டில் எங்கு அமைந்துள்ளது?

A) கொல்லிமலை
B) கஞ்சமலை
C) ஏலகிரி மலை
D) சேர்வராயன் மலை

**Ans: B**

79. இந்தியாவின் நூல் கிண்ணம் என்று அழைக்கப்படும் மாநிலம் எது?

A) தமிழ்நாடு
B) அசாம்
C) கர்நாடகா
D) கேரளா

**Ans: A**